ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,885—1969 දෙසැම්බර් 19 වැනි සිකුරාදා—1969.12.19

14,885 ம் இலக்கம்—1969 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (III)—வியாபார உரிமை அடையாளங்களும் ஆக்க உரிமை விளம்பரங்களும்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் | 235 | அலங்கார சித்திரச்சட்ட விளம்பரங்கள் | — |
| வியாபார உரிமை அடையாள அறிவிப்பு | — | வடிவஅமைப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் | — |
| ஆக்க உரிமைக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் | — | பலவினமானவை | — |


## வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள்

### வியாபார உரிமை அடையாள அலுவலகம்

வியாபார உரிமை அடையாளம் சம்பந்தமான சகல கடிதங்களும் வியாபார உரிமை அடையாளப் பகுதிப் பதிவாளர், கம்பெனிகள் பதிவாளர் அலுவலகம், கட்டடம் 5, எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

### பரிசோதனைக்குரிய நேரம்

அரசாங்க விடுமுறை தவிர்ந்த ஒவ்வொரு கிழமை நாட்களிலும் 10 மணி தொடக்கம் 4 மணிவரையிலும், போயா தினத்திற்கு முந்திய நாட்களில் 10 மணி தொடக்கம் 1 மணிவரையிலும் அலுவலகம் பொதுசனங்களின் அலுவலுக்குத் திறந்திருக்கும்.

எனினும், பரிசோதனைக்குரிய விண்ணப்பப்பத்திரங்கள் கிழமை நாட்களில் மாலை 3 மணிவரையிலும், போயா தினத்துக்கு முந்திய நாட்களில் மத்தியானம் 12 மணி வரையிலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

### நிறங்களை வரையறுக்கும் வியாபார உரிமை அடையாளங்கள்

ஒரு வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யப்படும் பொழுது, அது குறிப்பிட்ட நிறங்களுக்கு வரையறுக்கப்பட்டதென்று விண்ணப்பம் பிரசுரத்தில் குறிப்பிட்டிருந்தால், அந்த நிறங்கள் கூடுமானவரை வழக்கமான கட்டியம் சார்ந்த முறையில் இத்துடனுள்ள அடையாளச் சின்னத்தில் காட்டப்படும்.

### கூட்டுச் சேர்க்கை

150 ஆம் அதிகார வியாபார அடையாளச் சட்டத்தின் 23 ஆம் பகுதியின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒரு அடையாளம் இன்னொரு வியாபார அடையாளத்துடன் கூட்டுச் சேர்க்கப் படவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தால், அது அதன் உத்தியோக எண்ணிருல் காட்டப்படும்.

### " அ " அல்லது " ஆ " பகுதியின் கீழ் விண்ணப்பம்

பதிவேட்டின் " அ " பகுதியின் கீழ் வரும் விண்ணப்பங்கள் வேறு யாதும் எழுத்தின்றி உத்தியோக எண் மூலமாகவே காட்டப்படும். பதிவேட்டின் " ஆ " பகுதியின் கீழ்வரும் விண்ணப்பங்கள் உத்தியோக எண்ணுக்கு முன் "ஆ" என்ற எழுத்தால் தெளிவாகக் காட்டப்படும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விளம்பரதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1968 ஆம் ஆண்டு திசெம்பர் மீ 14 ஆந் தி.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

## எதிர்ப்பு

பின்வரும் வியாபார அடையாளங்கள் பதிவு செய்வதை யாராயினும் எதிர்க்கக் காரணங்கள் இருந்தால் இந்த வர்த்தகப் பத்திரிகைத் தேதியிலிருந்து இரு மாதங்களுக்குள் அழிக்கப்படாத அல்லது படிவு செய்த 25 ரூபா பெறுமதியான முத்திரையுடன் ரீ. எம். 7 பத்திரத்தில் எதிர்ப்பு அறிவித்தலைச் சமர்ப்பிக்க வேண்டும். பதிவாளர் தகுதியானதெனக் கருதினால், அவர் விதிக்கும் நிபந்தனைகளுடன் எதிர்ப்புத் தெரிவிக்கும் கால எல்லை நீடிக்கப்படலாம். பதிவு கோரும் விண்ணப்பக்காரர் தனது விண்ணப்பத்தை மீளப்பெறுவதற்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் முகமாக, முறைப்படியான அறிவித்தல் எதிர்ப்பு விண்ணப்பம் தயாரிப்பதற்கு வேண்டிய செலவைச் செய்யுமுன், அவருக்குக் கடிதமூலம் நியாயமான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். எதிர்ப்பவர் அத்தகைய அறிவித்தலைக் கொடுக்கத் தவறின், விண்ணப்பகாரர் எதிர்ப்பை எதிர்த்து வாதிடாதவிடத்து, எதிர்ப்பவரின் செலவு கோரும் மனு பரிசீலனை செய்யப்படும்போது அது கவனத்துக்கெடுக்கப்படும்.

---

(1) வியாபாரச் சின்னம் இல. 27,084. (2) பெற்ற திகதி : 1965 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ஆந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : விச்டெல் அன்ட் சாக்ஸ் எ. ஜீ. மேற்கு ஜேர்மனியச் சட்டங்களுக்கமைய நிறுவப்பட்ட ஒரு கூட்டுப் பங்குத் தொகுதிக் கம்பனி, ஷவெயின்வேட் அன் மெயின் மேற்கு ஜேர்மனி ; உற்பத்தியாளர்களும் வணிகர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின், அது : திருவாளர்கள் யூலியசும் கிறீசியும், த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 13. (6) வியாபாரச்சரக்கு : சில்லுக் குடங்கள், தாளுகளியங்கும் சில்லுக் குடங்கள், தடுப்புக் குடங்கள், பல துணைப் பொறிகள்கொண்ட குடங்கள், துணைப்பொறிச் சில்லுகள், சங்கிலிச் சில்லுகள், சங்கிலிகள், காலால் அல்லது கையால் அல்லது துணைக்கருவிகளால் இயங்கக்கூடிய தடுப்புகள் மிதிசுழற்றித் தண்டுகள், கப்பிகள், இணைப்புகள், எல்லாத் தேவைகளுக்குமுரிய வில்லு இடை நிறுத்திகள் அசைவைத் தடைசெய்யும் கருவிகள், இரும்பிலான சிறிய பூட்டுகளும், உலோகப் பொருட்களும், கம்பியாலான பொருட்களும், மேற்கூறிய பொருட்களின் பாகங்களும் ஆகியன உட்பட 13 ம் வகுப்பிலடங்கிய எல்லாப் பண்டங்களும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

SACHS

7. இவ்வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்வதால் “ எஸ் ” என்ற எழுத்தும் “ சாஷ்ஸ் ” என்ற சொல்லும் பாவிப்பதற்கு ஏகோபித்த உரிமை கொடுக்கப்படவில்லை.

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1968 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 9 ஆந் வ.

12–864

---

(1) வியாபாரச் சின்னம் இல. 23,318. (2) பெற்ற திகதி : 1962 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7 ஆந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : என். வி. பிலிப்ஸ் குளொய் லாம்பென் வப்றிகென் நெதர்லாந்து இராச்சியத்தின் சட்டங்களுக்கமைய நிறுவப்பட்டு நடைமுறையிலுள்ள ஒரு வரையறுத்த பொறுப்புக்கம்பனி, 29 எமாசிங்கல், ஈன்ட்கோவன் வணிகர்களும் உற்பத்தியாளர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின், அது : திருவாளர்கள் யூலியசும் கிறீசியும், த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 6. (6) வியாபாரச்சரக்கு : காய்ச்சி இணைக்கும் மின்பொறிகளும், அதன் பகுதிகளும், அதற்கு வேண்டிய பொருத்திகளும், மசகு எண்ணெய், கைத்தொழில் வெப்பாற்றிகள் ஆகியவற்றிற்குரிய வடிகட்டிகள், (இயந்திரங்களின் அல்லது மோட்டார்களின் அல்லது பொறிகளின் பகுதுகளாகும்) உலோகத்தில் சூட்டை ஏற்றுவதற்கான மின்னூக்கிகள், மின் ஒடுக்கிகள், காய்ச்சி இணைக்கும் மின் கருவிகள், மின்வாய்கள், மின்வாய் வைகப்பிடிகள், (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**PHILIPS**

ஜே. எவ் பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1968 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மீ 26 ந வ.

12–863

---

(1) வியாபாரச் சின்னம் இல. பி27,978. (2) பெற்ற திகதி : 1966 ஆம் ஆண்டு யூன் மாதம் 8 ஆந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) மீட் ஜோன்சன் அன்ட் கம்பனி, ஐக்கிய அமெரிக்க இராச்சியங்கள், இந்தியானு 47721, ஈவன்ஸ்லிவி, பென்சில்வேனியா 2404ம் இலக்கத்தில் ஒரு வியாபார இடத்தையும் ஒரு மனையையும் கொண்டு, ஐக்கிய அமெரிக்க இராச்சியங்களின், இந்தியானு இராச்சியத்தின் சட்டங்களுக்கமைய முறையாக நிறுவப்பட்டுள்ளது ; உற்பத்தியாளர்கள். (4) இல்ங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின், அது : திருவாளர்கள் யூலியசும் கிறீசியும் த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 42. (6) வியாபாரச்சரக்கு : பிள்ளைகளுக்கும் வயதுவந்தவர்களுக்குமான போசணைக்குரியதும் உணவு விதிமுறைகளுக்குரியதுமான தனிச்சிறப்புப் பண்டங்களும், குழந்தைகளுக்கும் நோயாளிகளுக்குமான உணவு தயாரிப்பு முறைகளும், மக்கள் பாவிப்பிற்குரிய உயிர்ச் சத்தும் கனிச்சத்தும்கொண்ட அல்லது உயிர்ச்சத்தோ கனிச்சத்தோ கொண்ட உணவுச்குறைநிரப்பிகள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

Mead Johnson

*Research for Life*

1. இவ்வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்வதால் “ ரிசேர்ச் ” “ வொ ” “ லைவ் ” என்ற சொற்கள் வெவ்வேறாகப் பாவிப்பதில் தனி உரிமை வழங்கப்படவில்லை.

2. இவ்வியாபார உரிமை அடையாளம், இல. 7559, 27977, 27979, பி23236 கொண்ட வியாபார உரிமை அடையாளங்களுடன் இணைக்கப்படவிருக்கிறது.

3. இவ்விண்ணப்பம் பதிவேட்டின் “ ஏ ” பகுதியிலிருந்து மாற்றப்பட்டு பதிவேட்டின் “ பி ” பகுதியின் கீழ் தொடருவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1967 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆந் திகதி.

12–865

(1) வியாபாரச் சின்னம் இல. : 29848. (2) பெற்ற திகதி : 1967 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : கண்டி, 619, பெரதேனியா வீதியில் "டீன் அன்ட் சன்ஸ்" என்னும் பெயரில் வணிகம் செய்பவராகிய மொகமட் காதர் பீர் மொகிடீன்; உற்பத்தியாளர்களும் வணிகர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின், அது : திருவாளர் டீ. என். துரைராசா, த. பெ. இல. 1464, கொழும்பு. (5) 48. (6) வியாபாரச் சரக்கு : ஊதுபத்திகள். (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம்:

**A R U L   M O H A N**

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச் சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 10 ந் உ.

**12–867**

---

(1) வியாபாரச் சின்னம் இல. 30,017. (2) பெற்ற திகதி : 22 பெப்ரவரி 1968. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) சோசீரா பாமசியூரிசி இற்றலியா, லாகோகைட் டொன்கனி 1–2, மிலான், இத்தாலி, இது ஒரு இத்தாலியக் கம்பெனி ; உற்பத்தியாளர்களும் வணிகர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின், அது : திருவாளர்கள் ஜூலியஸ், கிறீசி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 3. (6) வியாபாரச் சரக்கு : மருந்துப்பாக ஆக்கங்கள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**DEFLAMIN**

இச்சின்னம் வியாபாரச்சின்ன இல. 28,593 உடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1968 ம் ஆண்டு ஜூலை மீ 25 ந் உ.

**12–866**

---

(1) வியாபாரச் சின்னம் இல. 30,947. (2) பெற்ற திகதி : 1968 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 13 ஆந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : சி. எச். போறிங்கர் சோன், ஜேர்மன் கூட்டுக்குடியரசுச் சட்டங்களுக்கமைய நிறுவப்பட்ட ஒரு கொமான்டிற்கெ செல்ஸ்ஷாவ்ற், இங்கெல்கெய்ம் அம் றெயின், ஜேர்மனி ; உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின், அது : திருவாளர்கள் யூலியசும் கிறீசியும், த. பெ. இல. 153, கொழும்பு. (5) வகுப்பு : 3. (6) வியாபாரச்சரக்கு : 3 ஆம் வகுப்பிலடங்கிய எல்லாப் பண்டங்களும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**A U X I S O N E**

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1969 ஆம் ஆண்டு மே மீ 19 ஆந் உ.

**12–847**

---

(1) வியாபாரச் சின்னம் இல. பி. 28,104. (2) பெற்ற திகதி : 1966 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர் : சி. டபிள்யூ. சேனி அன்ட் சன் லிமிட்டெட், பக்டறி வீதி, றொக்லெ, பேர்மிங்காம் 19 இங்கிலாந்திலுள்ள ஒரு பிரித்தானியக் கம்பனி, உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேனும் விலாசம் இருப்பின், அது : திருவாளர்கள் யூலியசும் கிறீசியும், த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 13. (6) வியாபாரச்சரக்கு : கைப்பெட்டிகள், சிறு கைப்பெட்டிகள், பயணப் பைகள், ட்ரங்குகள் இவைபோன்ற பொருள்கள் ஆகியவற்றிற்கான, பொதுஉலோகத்தில் செய்யப்பட்ட உட்புற, வெளிப்புறப் பொருத்திகளும், கைப்பெட்டிகள், பயணப்பைகள், சிறுகைப்பெட்டிகள், ட்ரங்குகள், பயணத்திற்கான மற்றைய பொருள்கள் ஆகியவற்றிற்கான பொது உலோகத்துல் செய்யப்பட்ட கைப்பிடிகளும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**C H E N E Y**

8. பாவிக்கப்பட்டதென்ற அத்தாட்சியின் பேரில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9. இவ்விண்ணப்பம் பதிவேட்டின் பகுதி "ஏ", யிலிருந்து பதிவேட்டின் பகுதி "பீ"க்கு மாற்றப்பட்டுள்ளது.

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1968 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மீ 24 ந் உ.

12–848

---

(1) வியாபாரச் சின்னம் இல. 30,359. (2) பெற்ற திகதி : 1968 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : சான்டோஸ் லிமிட்டெட், (சான்டோஸ் ஏ. ஜீ. என்றும் சாண்டொஸ் எஸ். ஏ. என்றும் வியாபாரஞ் செய்யும் ஒரு சுவில் கம்பனி, லேயிற் ஸ்ராசி 35, பசில், சுவிற்ஸலாந்து, உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின், அது : திருவாளர்கள் யூலியசும் சிறீசியும், த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 3. (6) வியாபாரச்சரக்கு : மருந்துகள், அதாவது தொகுப்பு தூண்டு முட்சுரப்பு ஆக்கங்கள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**S A N D A C T H I D**

இவ்வடையாளம், இல. 11997, 11999, 14860, 15119, 21782, 29, 257, 29, 259 கொண்ட வியாபார உரிமை அடையாளங்களுடன் இணைந்துள்ளது.

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1969 ஆம் ஆண்டு மார்ச் மீ 15 ந் உ.

12–846

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசத்தாருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

### அட்டவணை — 1969

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| திசெம்பர் | 5.12.69 | வெள்ளி | 28.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.12.69 | வெள்ளி | 4.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 19.12.69 | வெள்ளி | 12.12.69 | வெள்ளி | பி.ப | 3.30 |
| | 26.12.69 | வெள்ளி | 18.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |

### அட்டவணை—1970

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| சனவரி | 2.1.70 | வெள்ளி | 26.12.69 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 9.1.70 | வெள்ளி | 2. 1.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 16.1.70 | வெள்ளி | 8. 1.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 23.1.70 | வெள்ளி | 16. 1.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 29.1.70 | வியாழன் | 21. 1.70 | புதன் | ந. ப. | 12.00 |
| பெப்புருவரி | 5.2.70 | வியாழன் | 28. 1.70 | புதன் | பி. ப. | 3.30 |
| | 13.2.70 | வெள்ளி | 5. 2.70 | வியாழன் | ந. ப. | 12.00 |
| | 20.2.70 | வெள்ளி | 13. 2.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 27.2.70 | வெள்ளி | 20. 2.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| மாச்சு | 5.3.70 | வியாழன் | 27. 2.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 13.3.70 | வெள்ளி | 5. 3.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 20.3.70 | வெள்ளி | 13. 3.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 26.3.70 | வியாழன் | 20. 3.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ஆம் ஆண்டு திசெம்பர் மீ 12 ஆந் உ.

**எல். டபிள்யு. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.